உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

**இந்துசாதனம்**
**(HINDU ORGAN)**
email : saivaparipalanasabai1888@gmail.com

ஹேவிளம்பி ஞு மார்கழி மாதம் மீ 1ஆம் உ [16.12. 2017]

# சைவ சித்தாந்த மரபை வளர்த்தெடுக்க முன்வருவோம்

இப்போதெல்லாம் சைவசித்தாந்தம் குறித்து பேச்சு மீளவும் துளிர் விட்டிருக்கிறது. சமூக வலைத்தளங்களில் சித்தாந்தம் குறித்து ஆய்வுகளும் அலசல்களும் விவாதங்களும் அவ்வப்போது நடைபெறுவதை காணமுடிகிறது.

இந்து சமய தத்துவப்பிரிவுகளான சங்கர வேதாந்திகள் (அத்வைதர்கள்), இராமானுஜ வேதாந்திகள் (ஸ்ரீவைஷ்ணவர்கள்), மத்வவேதாந்திகள் (துவைதர்கள்) போன்றோர் மட்டுமன்றி கிறிஸ்தவர்கள் போன்ற பிற சமயிகள் கூட இவ்வாறான விவாதங்களில் ஆர்வத்தோடு ஈடுபடுவதை காணமுடிகிறது. இது தவிர சைவசமயப் பிரிவுகளாக கொள்ளத்தக்க வீரசைவம், காஷ்மீரசைவம், சுத்தாத்வைத சைவமான சைவசித்தாந்தம், சிவாத்வைத சைவம் போன்றவற்றிடையே உள்ள ஒற்றுமை - வேற்றுமைகள் குறித்துப் பெரும் அலசல்கள் நிகழ்கின்றன.

இணைய வாயிலாகவும் நடைபெறுகின்ற இந்த ஆய்வுகள் மூலம் சைவசித்தாந்தம் குறித்த இளைஞர்களின் ஆர்வம் தூண்டப்பட்டிருப்பதாக கருதலாம். ஆனால் ஈழத்தமிழர்களிடையே இவ்விவாதங்கள் பெருமளவில் இப்போது நடப்பதாக தெரியவில்லை. இது ஒருபுறமிருக்க, இப்போது சைவசித்தாந்த செந்நெறியை கற்க விரும்பாத, அது குறித்து அறிவு பூர்வமாக ஆராய விழையாத சிலரும் தம்மை சைவசித்தாந்திகளாக அடையாளப்படுத்திக்கொண்டு விபரீதமான சில செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கால மாற்றத்தை உள்வாங்கி இன்றைய சூழ்நிலையை உணராது செய்யப்படும் எப்பணிகளும் வெற்றி தராது. ஆதலில் பழைய கால புறச்சமய, புறப்புறச்சமய பாகுபாடுகளை கைவிட்டு சித்தாந்தத்தை உணர விழையும் அல்லது அறிய விரும்பும் யாவரையும் இணைத்துக் கொண்டு பயணிக்க வேண்டிய தேவையும் கடப்பாடும் நமக்கு உண்டு.

கடந்த சித்திரைத் திங்களில் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாய எழுச்சிக்கு வித்திட்ட மஹான் இராமானுஜரின் ஆயிரமாவது ஆண்டு விழா உலகளாவிய ரீதியில் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.இந்த விழா மூலம் வைஷ்ணவ சமயம் மற்றும் விசிஷ்டாத்வைத கொள்கை குறித்து பரவலாகவே ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

நாமும் சைவசித்தாந்த ஆசிரியர்களில் முதன்மையான மெய்கண்டதேவர் அல்லது உமாபதி சிவாச்சாரியர் பேரில் இத்தகு எழுச்சியை உண்டாக்கலாம். இன்றைக்கு ஸ்ரீ வைஷ்ணவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள திருமலை - திருப்பதி தேவஸ்தானம் சைவத்திருமுறைகள் பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்ப்பாக பெரும் நிதி தந்து உதவுகிறது. திருப்பதி சிவாகமப் பாடசாலை நடக்க வழி கோலுகிறது. புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சு ஆய்வு நிறுவனமே சிவாகமங்களை பதிப்பிப்பதில் முன் நிற்கிறது.

அத்வைத நெறிபேணும் சங்கரமட அன்பர்கள் சிவாகம பாடசாலை நடாத்துகிறார்கள். சிவாகமங்களின் பதிப்பிற்கு ஆவன செய்கிறார்கள். ஆகவே, எல்லோரதும் அனுசரணையை பெற்று சைவசித்தாந்தத்தை பெரும் எழுச்சியோடு வளர்க்க முன்வரவேண்டும்.

சித்தாந்தத்தை பரீட்சைக்காக கற்காமல் நம் முன்னோர் போல அறிவுக்காகவும், ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் கற்க முன்வரவேண்டும். இவற்றுக்கப்பால் சைவ சித்தாந்தம்